1993 டிசம்பர் 31]

அதிகமாகப் பயன் பெறுகிறார்கள். கூட்டுறவுத் துறை தன்னாலான முயற்சிகள் அத்தனையிலும் ஈடுபட்டு அவர்களுக்கு எந்த அளவுக்கு அதிகமாக கூட்டுறவுத் துறை வங்கிகள் மூலமாக கடன்கள் தரமுடியுமோ அந்த அளவிற்கு அதிகமாக தந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஐ.ஆர்.டி.பி. கடன் பெறுவதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக கூட்டுக் குடும்பத்திலே அண்ணனுக்கு கடன் இருந்தால் தம்பி வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அண்ணன் தம்பிகள் பாகம் பிரித்துக் கொண்டு தனிக் குடித்தனம் வந்து, ரேஷன் கார்டும் தனியாக வைத்திருக்கின்ற போதும், அண்ணனுக்கு கடன் பாக்கி இருக்கின்ற காரணத்தினாலே தம்பியும் கடனை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதுபோன்ற விதிகளை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடும்பத்திலே இருந்து ஒருவர் தனியாகப் பிரிந்து செல்லுகிறார் என்று சொன்னால், சட்டப்படி அந்தக் கூட்டுக் குடும்பத்திலேயிருந்து அவர் பிரிந்து சென்றார் என்பதற்கான ஆவணங்களை உரிய அதிகாரிகளிடம் தந்தால், பிரிந்து சென்றவர்களுடைய குடும்பம் தனிக் குடும்பம் என்று கணக்கு எடுக்கப்பட்டு அவர் தருகின்ற அந்த மனுவை பரிசீலனை செய்வார்கள். கூட்டுக் குடும்பத்திலேயிருந்து பிரிந்து சென்றுவிட்டோம் என்று வாய்மொழியாகச் சொன்னால் அதை அரசு அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 117. திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு இருக்கையில் இல்லை. வினா எண். 118. திரு. வே. தம்புசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

118–

நாகலூரிலிருந்து வலிவலம் வரை சாலை அமைத்தல்.

*** 20062–திரு. வே. தம்புசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் வட்டம், நாகலூரில் இருந்து வலிவலம் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை 1993-94 மற்றும் 1994-95 நிதியாண்டுகளில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.

முற்பகல் 11.05

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நாகலூர்-- வலிவலம் சாலை என்பது திருவாரூர் நகரத்தை இணைக்கக் கூடிய நேர்வழிச் சாலையாகும். இந்தச் சாலை நாகலூர், செம்பனேரி, கன்னாபுரு, கோயின்கன்னாபுரு, ஆதமங்கலம், வலிவலம் வழியாக வருகிறது.

இந்தச் சாலையில் அதிகமான கிராமங்கள் இணைத்து வருவதால் அதிகமான போக்குவரத்துகள் ஏற்படுகிறது. அதுவும் வலிவலத்தில் இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளிக்கு இந்தச் சாலையின் வழியாக அதிகமான மாணவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாலையை சீரமைப்பதற்கு தொடர்ந்து பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தச் சாலையை விரைவாக எடுத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் சொல்லியிருக்கின்ற சாலையின் மொத்த நீளம் சுமார் 4.80 கிலோ மீட்டர் ஆகும். இச்சாலையில் ½ கிலோ மீட்டர் நீளத்தை 1992-93 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கின்ற 1.60 கிலோ மீட்டர் நீளத்தை இந்த ஆண்டு 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மீதம் இருக்கின்ற பகுதியை 1994-95 ஆம் நிதி ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்து மேம்பாடு செய்யப்படும் என்ற உறுதிமொழியை அளிக்கின்றேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக இச்சாலை மோசமான

நிலையில் பழுதடைந்திருக்கிறது. ஆகவே, பகுதியாக எடுத்து செய்வதைவிட இச்சாலைக்கு முன்னுரிமைக் கொடுத்து வலிவலம்-நாகலூர் சாலையை விரைவாக அமைப்பதற்கு அதுவும் இந்த ஆண்டே இந்த வேலையை சிறப்புத் திட்டத்திலாவது எடுத்து செய்து முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சிறப்பு கவனம் செலுத்தி விரைவாக செய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாலை மட்டும் இந்த ஆண்டு போடப்படுவதில்லை. பல நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் நீளம் கொண்ட கிராமச் சாலைகளை அரசு போட்டுக்கொண்டிருக்கிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், கிராமச் சாலைகள் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் வாயிலாக போடப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துருவின்மீது ஆய்வு செய்யப்பட்டு அப்படி அவசியம் இருப்பின் இந்த ஆண்டே இது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 119. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

119–

உசிலம்பட்டி ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

* *7542*–திருமதி இரா. பாண்டியம்மாள்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலுள்ள ஆதிதிராவிட நலத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் விடுதி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.